| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
|---|---|

செ.வெ.எண்: 26 நாள்:18.06.2021

## *தூய்மை பணியாளர்களுக்கு அரசின் திட்டங்கள் அனைத்தும் சென்றடைவதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.*

## *தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தலைவர் திரு.எம்.வெங்கடேசன் அவர்கள் உத்தரவு.*

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (18.6.2021) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் தூய்மை பணியாளர்களுக்கான மறுவாழ்வு திட்டங்கள், கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் முன்னிலையில், தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தலைவர் திரு.எம்.வெங்கடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

### தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தலைவர் திரு.எம்.வெங்கடேசன் அவர்கள் தெரிவித்ததாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் தூய்மை பணியாளர்களுக்கான மறுவாழ்வு திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அவற்றில் கல்வி, மருத்துவ வசதி, குடியிருப்பு வசதிகள், ஊதியம் மற்றும் கொரோனா நோய்த்தொற்று காலத்தில் அவர்களுக்கு தேவையான பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. ஊதியத்தை பொறுத்த வகையில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளின் தூய்மை பணியாளர்களுக்கான ஊதியம் தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருவதை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். தூய்மை பணியாளர்களின் நலனும், அவர்களின் ஆரோக்கியமும் மிக மிக முக்கியம். இதனை கருத்தில் கொண்டு தூய்மை பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒருமுறை கட்டாயமாக மருத்துவ முகாம் நடத்தி உரிய மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் பல்வேறு காப்பீட்டு திட்டங்களின் தூய்மை பணியாளர்களை இணைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் 2022-க்குள் அனைவருக்கும் வீடு என்ற மாபெரும் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். தூய்மை பணியாளர்களுக்கு குடியிருப்பதற்கான வீடு மிக மிக அவசியம். அத்தகைய குடியிருப்பு வசதிகளை குடிசை மாற்று வாரியம் மற்றும் பிற திட்டங்கள் மூலம் கட்டித்தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மத்திய, மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற அனைவருக்கும் வீடு திட்டங்களின் மூலம் அரசின் மானியத் தொகையோடு அவர்களின் பங்களிப்பையும் செலுத்தி தனி வீடுகள் கட்டிக்கொள்வதற்கு ஏற்பாடு செய்திட வேண்டும். எனவே, தூய்மை பணியாளர்கள் அனைவருக்கும் சொந்த வீடு கட்டித்தருவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். தூய்மை பணிகளில் ஈடுபட்டு வருபவர்களின் குழந்தைகள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர், கல்வி மேம்பாடு மற்றும் சுயதொழிலில் ஈடுபடுவதற்கான அனைத்து வசதிகளையும் உருவாக்கித் தர வேண்டும். தூய்மை பணி செய்து வருபவர்களின் பிள்ளைகள் மீண்டும் தூய்மை பணிகளை செய்யாமல் அவர்களும் நன்கு படித்து அரசு அலுவலர்களாக பணியாற்றுவதற்கான வாய்ப்பு சிறந்த கல்வியில் மட்டுமே கிடைக்கின்றது. எனவே, அத்தகைய கல்வியை தூய்மை பணியாளர்களின் குழந்தைகளுக்கும் கிடைப்பதை உறுதி செய்திட வேண்டும். தூய்மை பணியாளர்கள் மட்டுமல்லாமல் அவர்களுடைய குடும்பத்தாரையும் பாதுகாக்க வேண்டும்.

மேலும், தூய்மை பணியாளர்களின் குழந்தைகள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் சுயமாக தொழில் செய்வதற்கு அரசு பல்வேறு கடனுதவிகளை அளித்து வருகின்றது. மத்திய அரசு 25,000 முதல் 25 இலட்சம் வரை தொழில் தொடங்குவதற்கு கடனுதவி அளித்து வருகின்றது. மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் உள்ளிட்டவற்றில் குப்பை சேகரிப்பதற்கு அல்லது தூய்மை பணிகளை மேற்கொள்வதற்கு உபகரணங்கள் அல்லது வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கு பதிலாக தூய்மை பணியாளர்களின் குழந்தைகள் மற்றும் அவரை சார்ந்தோர்களுக்கு கடனுதவி வழங்கி அவர்களுக்கு அவர்களுக்கு தொழில் தொடங்க வாய்ப்பு வழங்கி அதன் மூலம் அவர்களின் பொருளாதாரமும் வாழ்க்கைத்தரமும் மேம்படுவதற்கு உதவிட வேண்டும். தூய்மை பணியாளர்களை சார்ந்து இருப்போர்களுக்கு தாட்கோ மூலம் வங்கிகளில் கடனுதவி பெற்று சுயதொழில் தொடங்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் நேரடியாக வங்கிக்கணக்கிற்கு வரவு வைக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கு அரசு வழங்கும் ஊதியம் முழுமையாக சென்றடைகிறதா என்பதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும். அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் 100

PRO-KGI

சதவீதம் சொந்த வீடுகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தூய்மை பணியாளர்கள் தூய்மைப்பணிகளில் தொடர்ந்து ஈடுபடுவதால்தான் நாடும், நகரமும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருக்கின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். உலக அளவில் கொரோனா நோய்த்தொற்று பரவியுள்ள சூழ்நிலையில் தூய்மை பணியாளர்கள், மருத்துவர்கள், காவலர்கள் மற்றும் பிற துறை சார்ந்த அலுவலர்கள் இரவு பகல் பாராமல் உழைத்து கொரோனா நோய்த்தொற்றினை கட்டுப்படுத்த பாடுபட்டு வருகின்றனர். அப்படிப்பட்ட தூய்மை பணியாளர்கள் மீது துறை அலுவலர்கள் தனி கவனம் செலுத்தி அவர்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றித்தர வேண்டும் என தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தலைவர் திரு.எம்.வெங்கடேசன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தலைவர் திரு.எம்.வெங்கடேசன் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நகராட்சி, ராசி வீதி பகுதியில் அமைந்துள்ள தூய்மை பணியாளர்கள் குடியிருப்பில் ஆய்வு மேற்கொண்டு, குடியிருப்பில் உள்ள தூய்மை பணியாளர்களிடம் கொரோனா நோய்த்தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.பி.பெரியசாமி, ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.எம்.செந்தில் முருகன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ராஜூ, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.வி.கோவிந்தன், உதவி இயக்குநர்கள் திரு.எஸ்.கண்ணன் (பேரூராட்சிகள்), திரு.ராமகிருஷ்ணன் (ஊராட்சிகள்), மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.எம்.செந்தில்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு.பி.முருகன் (பொது), திரு.எஸ்.தேவராஜ் (சிறுசேமிப்பு), மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.சேதுராமலிங்கம், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் திருமதி.ஆர்.சந்திரா, பொது மேலாளர் (தாட்கோ) திரு.யுவராஜ், முன்னோடி வங்கி மேலாளர் திரு.ஆர்.மகேந்திரன், பேரூராட்சி செயலாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| முககவசம் அணிவீர் | தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம் |